தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர் &
உதவிப் பேராசிரியர் (வேளாண் விரிவாக்கம்)
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 – 6611302
நிகரி: 0422 – 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர், தேதி: 16-6-2015
ஆசிரியர்,

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## திறந்தவெளி மூலம் முதுகலை பட்டப்படிப்புக்கு விண்ணப்பிக்கலாம்

கோயமுத்தூர் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் திறந்தவெளி மற்றும் தொலைதூரக்கல்வி இயக்ககம் பலரும் பயன்பெறும் வகையில் கரும்பு வளர்ப்புத் தொழில்நுட்பங்கள் (SCT), சுற்றுச்சூழல் மேலாண்மை (ENS), வணிக மேலாண்மை (MBA) ஆகிய இரண்டாண்டு பட்டப் படிப்புகளை வழங்கிவருகிறது. இப்பாடங்கள் எளிய முறையில் சிறந்த ஆசிரியர்களைக்கொண்டு திறம்பட நடத்தப்பெறுகின்றன.

முதுகலை சுற்றுச்சூழல் மேலாண்மை – இப்பாடம் சுற்றுச்சூழல் சார்ந்த வளர்ச்சிகள் மற்றும் சுற்றுச்சூழல் மாசுபாட்டினை தவிர்க்க உதவிபுரியும். மற்றும் சமூக ஆர்வலர்கள், தன்னார்வ தொண்டு நிறுவன உறுப்பினர்கள் மற்றும் தனிநபர்களது வளர்ச்சிக்கும் மிகவும் உதவிபுரிகின்றன. இத்துடன் அவர்களது திறமை மற்றும் அறிவு வளர்ச்சிக்கும் இப்பாடங்கள் ஊன்றுகோலாக அமைகின்றது.

முதுகலை கரும்பு வளர்ப்புத் தொழில்நுட்பப் பாடம் கரும்பு ஆலைகளில் பணிபுரிபவர்களும், கரும்பு வளர்ப்புத் தொழில் புரிபவர்களும், நவீன தொழில்நுட்பங்களை தெரிந்து கொண்டு அதிக பயன்பெறும் வகையிலும், புதிய இரகங்களை அறிந்து கொள்ளும் வகையிலும் இக்கல்வியானது அமைகின்றது.

முதுகலை வணிகமேலாண்மை - இப்படிப்பானது வணிகத்தொழிலில் பணிபுரிவோர், வணிகம் செய்வோர், தொழிற்சாலைகள், நிறுவனங்கள் போன்றவற்றில் மேலாண்மை புரிபவர்களும் பயன்பெறும் வகையில் அமைகின்றது. வணிகவளாகம், தலைமைப்பண்பு

வளாகத்தில் அணுகுமுறைகள் என்பன போன்ற பொருள்களில் பாடங்கள் அமைவதால் சுயமுன்னேற்றத்திற்கான ஒரு ஊன்று கோலாக இப்படிப்பு அமைகிறது.

இப்படிப்புகளுக்கான விண்ணப்பங்களை கீழ்காணும் இணையதளத்தில் ரூ 250ஐ இணையம் மூலம் செலுத்தி பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். இப்பாடங்களைப் படிக்க விரும்புகிறவர்கள் **ஜூலை 24ஆம் தேதிக்குள் (24-7-2015) விண்ணப்பிக்கவும்.** மேலும் விபரங்களுக்கு திறந்தவெளி மற்றும் தொலைதூரக் கல்வி இயக்ககம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் என்ற முகவரியிலும், 0422-6611229 / 9489051046 / 94421 11048 என்ற தொலைபேசி எண்களிலும் மற்றும் **www.tnau.ac.in** என்ற இணையதளத்திலும் தொடர்பு கொள்ளலாம்.

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்